# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,202 — 1960 සැප්තැම්බර් 17 වැනි සෙනසුරාදා — 17.9.1960

12,202 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1950ம் ஆண்டின் 25ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை இலக்கம் 154**

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (i) ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் ரிக்கிரி பண்டார இலங்கரத்ன, வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் போக்குவரத்து அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால் நிறம் பூசப்பட்ட நெல் தானியம் கலக்கப்பட்ட எத்தொகையான நெல்லையும் இலங்கையின் எவ்வொரு இடத்திலிருந்து இலங்கையின் மற்றொரு இடத்திற்கு உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது அவர் சார்பில், முதற் கூறப்பட்ட இடத்திற்குச் சேர்மதியான பிரதி உணவுக் கட்டுப் பாட்டதிகாரியால் அல்லது உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் வழங்கப்படும் உத்தரவின் (பேர்மிட்) பேரிலும் தவிர இல்லாவிடின் அவ்வுத்தரவுக்கு அளிக்கப்படும் நிபந்தனைகள் பேரிலும் தவிர, கொண்டு செல்லவோ அல்லது எடுத்துச் செல்லவோ கூடாது எனத் தடை விதிக்கிறேன்.

மேற்கூறப்பட்ட இக்கட்டளை பின்வருவனவற்றிற்குப் பிரயோகிக்கப்பட மாட்டாது :—

(அ) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் எவ்வொருவரோ எத்தொகையான நெல்லையும் கொண்டு செல்லல் அல்லது எடுத்துச் செல்லல் ; அல்லது

(ஆ) பதிவு செய்யப்பட்ட நெல்லுக் குற்றும் இயந்திரம் வைத்திருக்கும் ஒருவரால் அல்லது அவர் சார்பில் அவரின் பண்டசாலைக்கோ அல்லது வியாபார நிலையத்திற்கோ கமத்தொழிற் சேவைப் பகுதியால் அவ்வியந்திரம் வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட தொகையைக் கொண்டு செல்லல் அல்லது எடுத்துச் செல்லல்.

இக்கட்டளையில்—

“ நிறம் பூசப்பட்ட நெல் தானியம் ” என்பதன் பொருள், செயற்கை முறைகளால் “ மலச்சைட் பச்சை ” அல்லது “ கொச்சின் ஸ்காளற் ” அல்லது வேறு எவ்வித பொருட்களைக்கொண்டோ, நெல் தானியத்துக்கு அளிக்கப்படின் பச்சை அல்லது சிகப்பு நிறத்தைக் கொடுக்கக் கூடிய நெல் தானியத்தைக் குறிக்கும்.

“ பதிவு செய்யப்பட்ட நெல்லுக் குற்றும் இயந்திரமுடையவர் ” என்பதன் பொருள், தற்போதைக்குக் கமத்தொழிற் சேவை அதிகாரியால் அரசாங்கத்தின் நெல்லைப் பணத்திற்கோ, வெகுமானத்திற்கோ குற்றிக் கொடுப்பதற்குப் பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

ரி. ப. இலங்கரத்ன,
வர்த்தக, வியாபார, உணவு,
கப்பற் போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
1960 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 14 ந உ.

9166.